# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.209/2022

**07.09.2023 - வா.சா. 1 சங்கீதா சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நர்ஸிங் முடித்துள்ளேன். 1ம் வாதி 12ம் வகுப்பு படித்துள்ளார். 2ம் வாதி பி.காம் வரை படித்துள்ளார். எங்களை எங்கள் தகப்பனார் படிக்க வைத்தார் என்றால் என் தாயார் தான் படிக்க வைத்தார். என் தாயார் கூலி வேலை செய்து வருகிறார். என் தகப்பனார் எனக்கு கருத்து தெரிந்தவரை சரியாக குடும்பம் நடத்தவில்லை. அவருக்கு குடிப்பழக்கம் உண்டு, சரியாக வேலைக்கு செல்ல மாட்டார். என்னுடைய சிறு வயதில் இருந்தே அவருக்கு குடிப்பழக்கம் உண்டு. என் தாயாருக்கு கூலி வேலையை தவிர வேறு எந்த வருமானமும் இல்லை.

நான் என்னுடைய உறவினர் வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்று குறிப்பிடுவது என் சித்தி வீடான கீரனூர் கிராமம். என் சித்த பெயர் புவனேஸ்வரி. என் சித்தி என்னுடன் எப்போதும் சுமூகமான உறவில் இருக்கிறார். என் தாயார் நாகப்பாடி கிராமத்தில் வசித்து வருகிறார். 1, 2 வாதிகளும் நாகப்பாடி கிராமத்தில் தான் வசித்து வருகிறார்கள். எனக்கு தற்போது திருமணம் நடந்துள்ளது. என்னை வாசுதேவன்பட்டு கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளார். ராஜா த/பெ. மாரி கவுண்டர் என்பவர் என் தகப்பனாரின் நண்பர் என்றால் சரிதான்.

அவர் எங்கள் குடும்பத்திற்கு பல வகையில் உதவி செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 33 செண்டு என்று சொன்னால் சரிதான். அதற்கு தெற்கால் புறம்போக்கு சொத்து உள்ளது. அதில் என் அப்பா செங்கல் அறுத்து வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பா செங்கல் சூளை செய்து எங்களை நல்ல முறையில் படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக அவர் குடிகாரர் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பத்திரத்தை பார்த்துள்ளேன். அதன் விவரம் எனக்கு தெரியாது. நான் சொத்து ஆவணத்தை பார்க்கவில்லை என்றும், பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து என் தாத்தாவிற்கு நில ஒப்படைவு மூலம் அரசு வழங்கப்பட்ட சொத்து என்றால் பூர்வீக சொத்து. காட்டப்படும் ஆவணம் அரசாங்கம் என் தாத்தாவிற்கு நில ஒப்படைவு செய்த ஆவணம் என்றால் நான் பார்த்ததில்லை.

என் தாத்தா அவருக்குண்டான சொத்தை தன் பிள்ளைகளுடன் சேர்ந்து 1.6.2011ல் பாகம் பிரித்துக் கொண்டார் என்று சொன்னால் சரிதான். அந்த அசல் ஆவணம் தான் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் சார்பதிவாளர் நகல் தான் வா.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1க்கு முன்பே என் அப்பாவும், என் தாத்தாவும் சேர்ந்து அச்சொத்துக்கள் பேரில் கடன் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்துப் பார்க்கவில்லை. தாவா சொத்து சம்மந்தமாக என் தகப்பனார் என் சித்தி புவனேஸ்வரிக்கு ஒரு அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் என் அப்பா கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.2. கடனை திருப்பி கொடுக்கவில்லை என்று என் சித்தி என் தகப்பனாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு பி.வா.சா.ஆ.3. அதற்கு என் அப்பா தரப்பில் இருந்து பதில் அறிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு பி.வா.சா.ஆ.4.

மேலும், பணத்தை திருப்பி செலுத்தாததால் என் சித்து திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தல் ஓ.எஸ் 61/2018 என் தகப்பனார் மீது தாக்கல் செய்து முதல் நிலைத் தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.5, 2ம் பிரதிவாதியின் கணவர் காவல் துரையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். 2013ல் புதுப்பாளையம் காவல் துறையில் அவர் பணியில் இருந்த போது என் தாயார், என் தகப்பனார் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு புகாரின் பேரில் 2ம் பிரதிவாதியின் கணவர் செல்வராஜ் என் பெற்றோரை அழைத்து பேசி சமாதானம் செய்து வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு 2ம் பிரதிவாதியின் கணவர் என் தகப்பனாருக்கு செங்கல் சூளை வியாபாரத்திற்கு பணம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

அவ்வாறு என் தகப்பனாரும் வாங்கிய கடனை திருப்பி செலுத்தி வந்தார் என்றால் தெரியாது. என் தகப்பனார் செங்கல் சூளை செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு தான் எங்களை படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப தொழிலே செங்கல் சூளை தொழில் தான் என்றால் சரிதான். என்

அப்பா செங்கல் சூளை தொழில் செய்து வந்தார் ஆனால் அதில் வந்த வருமானத்தை எங்கள் சவரட்சணை செய்யவில்லை. அந்த வருமானத்தை என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் கணவர் 2017ல் காவல் துறையில் இருந்து ஓய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் அவர் நண்பர் ராஜா துணையுடன் மேற்சொன்ன செல்வராஜிடம் ரூ.5 லட்சம் கடன் பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல.

ரூ. 5 லட்சத்தை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு என் அப்பா தனகடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கடன் பெறும் போது பொறுப்பிற்காக பி.வா.சா.ஆ.1 அசலை 2ம் பிரதிவாதியிடன் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு கொடுத்த கடனை 2ம் பிரதிவாதியின் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்து நேரடியாக பல முறை கேட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு கடனை கேட்கும் போது என் தகப்பனார் ஏற்கனவே என் சித்திக்கு எழுதிக் கொடுத்த கடனை பற்றி தெரிவித்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் என் சித்தியின் கடனை அடைப்பதற்காகவும், 2ம் பிரதிவாதியின் கடனை நேர் செய்வதற்காக கிரையம் கொடுக்க என் தகப்பனார் முன் வந்தார் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை அடைப்பதற்கு என் அப்பாவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. அந்த சூழ்நிலையில் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு 2ம் பிரதிவாதி முன் வந்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 13.9.2021 தேதியில் 2ம் பிரதிவாதி கொடுத்த பணத்தைக் கொண்டு என் தகப்பனார் என் சித்தி கடனை அடைத்தார் என்று சொன்னால் சரியல்ல. காட்டப்படும் ஆவணம் என் சித்தி, என் தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்த பைசல் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.6. பி.வா.சா.ஆ.6ல் ராஜா த/பொ மாரி கவுண்டர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.6 தேதியிலேயே என் தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் இருப்பது என் தகப்பனாரின் கையெழுத்து என்றால் சரிதான். அவ்வாவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.7. ஆனால் அது என் தாத்தா சொத்தாகும். பாண்டுரங்கன் என்பவர் என் தாத்தா என்றால் சரிதான். என் தாத்தாவும், என் தகப்பனாரும் 11.12.2008ல் ஒரு அர்ஜுனன் என்பவருக்கு அடமானம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால்

அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேலும் அதே சொத்தை அவர்கள் இரண்டு முறை மேலும் மேற்சொன்ன அர்ஜுணனிடம் அடமானம் வைத்துள்ள விவரம் எனக்கு தெரியாது.

மேலும் தவமணி என்பவரிடம் ஒரு அடமானக் கடன் போட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. என் சித்தியிடம் அடமானம் போட்டு மேற்சொன்ன அடமானக் கடன்களை பைசல் செய்த விவரம் எனக்கு தெரியாது. என் தாத்தாவும், அப்பாவும் தாவா சொத்தை கான்பித்து 2006ல் இருந்து அடமானம் போட்டு கடன் பெற்று வந்துள்ளனார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கடன்களை அடைப்பதற்காகவும், என் சித்திக்கு போட்ட அடமானக் கடனை அடைப்பதற்காகவும், 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. ( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- சங்கீதா

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.